# டிசம்பர் 6ம் படிப்பினை பெற வேண்டிய முஸ்லிம் அமைப்புகளும்

K.M. முஹம்மது இஸ்மாயீல் நூரி, நெல்லை

அல்லாஹ்வின் இல்லமாம் புகழ் மிக்க பாபரி மஸ்ஜித் தரைமட்ட மாக்கப்பட்ட சம்பவம் இந்திய வரலாற்றில் ஓர் மோசமான நாளாகும் டிச.6 என்று எல்லோரும் அறிந்துள்ளோம். அன்று நூற்றுக் கணக்கில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள். முஸ்லிம்களின் சொத்துக்களுக்கும், மாற்று மதத்தைச் சார்ந்தவர்களின் சொத்துக்களுக்கும் பேரிழப்பு ஏற்பட்டது. இந்தியாவில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் கூட வன்முறைகள் ஏற்பட்டன. பொதுச்சொத்துக்கள் நாசம் செய்யப்பட்டன. இந்தியா எங்கும் கலவரம் ஏற்பட்டது. இரு சமுகத்தார்களும் மோதிக்கொண்டார்கள். இதனால் தான் டிச. 6 வரலாற்றில் ஓர் மோசமான நாளாகும். இது 12 ஆண்டுகளுக்கு முன்பு உள்ள நிகழ்ச்சி. ஆனால் இன்றோ டிச. 6க்கு அதிகமான பெயர் ஏற்பட்டு விட்டது. இந்தியாவில் வாழும் ஒவ்வொருவரும் ஒரு வித பயத்தோடு கழிக்க வேண்டிய நாள் டிச. 6கும். வருடா வருடம் விமான நிலையங்களிலும், இரயில்வே நிலையங்களிலும், பேருந்து நிலையங்களிலும் டிடக்டர் என்னும் கருவியை வைத்துக் கொண்டு சோதனை போடும் நாள் டிச. 6. (டிச. 3 லிருந்து சோதனைகள் நடைபெறுகின்றன). இந்து மத சகோதரிகள் பூஜை செய்ய கோயிலுக்குச் சென்றால் அங்கும் மகளிர் அணியைச் சார்ந்த காவல் துறையினர் பூஜைக்குரிய பொருள்களை சோதிக்கும் நாள் டிச. 6. இந்தியாவிலுள்ள வழிபாட்டுத் தலங்களை பாதுகாக்க காவல் துறையினர் துப்பாக்கி ஏந்தி காவல்காக்கும் நாள் டிச. 6. எந்த நேரத்தில் எது நடக்குமோ என்று ஒவ்வொரு வரும் அஞ்சும் நாள் டிச. 6. காலை 6 மணி முதல் மாலை வரை அரசாங்கமும் காவல் துறை அதிகாரிகளும் நிம்மதியில்லாமல் கழிக்கும் நாள் டிச. 6 காவல்துறையினர் போராட்டம், தர்ணா, ஆர்ப்பாட்டம் நடத்தும் முஸ்லிம் அமைப்புகளுக்கு அனுமதியும் அளித்து இடங்களையும் தேர்வு செய்து கொடுத்து விட்டு குழம்பிப் போய், பின்பு அனுமதியை மறுத்துத் தடை செய்யும் நாள் டிச. 6. இந்நிலைக்கு யார் காரணம் என்று பார்க்கும் போது டிச. 6ஐ கறுப்புத்தினமாக அறிவித்து போராட்டம் நடத்தும் முஸ்லிம் அமைப்புகளால் தானா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. இதனால் ஒட்டு மொத்த முஸ்லிம் சமுதாயத்தின்மீது மாற்று மதத்தைச் சார்ந்தவர்களுக்கு வருத்தம் ஏற்படுகிறது. பிற சமுதாய மக்களைப் பீதி அடையச் செய்யுமாறு இஸ்லாம் கூறுகின்றதா? உலகப் பொது மறையாம் அருள் மறைகுர்ஆனில் அல்லாஹ் கூறியுள்ளானா? அல்லது உலகத் தூதர் நபி(ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்களா? என்பதை போராட்டங்கள் நடத்தும் முஸ்லிம் அமைப்புகள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இஸ்லாம் ஒரு மதமல்ல, அது ஒரு தெளிவான மார்க்கமாகும். அது இறைவனின் மார்க்கமாகும். தெளிவான வழியாகும். பிறசமுதாய மக்களுக்குத் தொல்லை தரும் மார்க்க இஸ்லாம் அல்ல. இனிய இஸ்லாத்தின் கொள்கைகளை எல்லோரும் ஏற்றுச் செயல்படுத்துகின்ற ஓர் அற்புதமான வழி இஸ்லாமாகும். வருடந்தோறும் துக்க நாளாக ஆக்கிக்கொண்டு இல்லங்களிலும், வீதிகளிலும் கருப்புக் கொடியேற்றுவது முஸ்லிம்களின் கலாச்சாரமல்ல. எல்லா வற்றிருக்கும் தீர்வு உலகப் பொதுமறை அல்குர்ஆனிலும், நபியின் வழியிலும் உண்டு என்று கூறக்கூடியவர்கள் அதற்கான குர்ஆனுடைய

வசனங்களையும், நபி(ஸல்) அவர்களின் ஹதீஸுகளிலும் ஆதாரத்தை காட்டவேண்டும்.

ஒன்றை நாம் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். இன்றைய சூழ்நிலையில் பாபரி மஸ்ஜிதா! ராமர் கோயிலா என்று தீர்மானிக்கும் அதிகாரம் இந்திய சுப்ரீம் கோர்ட்டுக்குத்தான் உண்டு. இந்தியாவிலுள்ள பாபரி மஸ்ஜித் கமிட்டி சுப்ரீம் கோர்ட்டின் முடிவை ஏற்போம் என்று அறிவித்து விட்டார்கள்; அல்லது இரு மதத்தலைவர்களும், அரசியல் தலைவர்களும் ஒன்றாய் கூடி முடிவு செய்ய வேண்டும். இப்படி இருக்கும்போது வருடந்தோறும் போராட்டங்கள் நடத்துகின்றவர்கள் சாதித்தது என்ன? என்பதை விளக்குவார்களா? நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ராமர் கோயிலைக் கட்டியே தீருவோம் என்று கூறி ஆட்சிக்கு வந்த காவிக்கட்சியான பி.ஜே.பி. ஆறு ஆண்டு காலம் ஆட்சி செய்தும் ராமர் கோவிலை கட்ட முடியவில்லை. இவர்கள் போராட்டங்கள் நடத்தி எதைச் சாதிக்கப்போகின்றார்கள்? போராட்டங்கள் நடத்துவதால் முஸ்லிம்களின் பொருளாதாரங்கள் தான் நட்டமாகும். வேறு எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. முஸ்லிம் அமைப்புகள் டிச. 6ஐ துக்க நாளாக கடைப்பிடிக்கின்றார்கள். இந்து தீவிரவாதிகளோ வெற்றித் தினமாக கொண்டாடுகிறார்கள். இதனால் மோதலுக்குத் தான் வழி என்பதை போராட்டங்கள் நடத்தும் முஸ்லிம் அமைப்புகள் உணராமல் போனது ஏனோ? வருடந்தோறும் போராடும் முஸ்லிம் அமைப்புகளின் நோக்கத்தை அல்லாஹ் மிக அறிந்தவன். ஒன்றாக இருந்தவர்கள் இப்போது இரு பிரிவாகப் பிரிந்து விட்ட பின்பு டிச. 6 வந்துள்ளது. இப்போது அவ்விரு அமைப்புகளும் தங்களின் செல்வாக்கு எவ்வாறு உள்ளது என்பதைப் பரிசோதித்துப் பார்ப்பதற்காக இந்த டிச. 6ஐ பயன்படுத்திக் கொண்டார்கள். டிச. 7ம் தேதி எல்லா தினப்பத்திரிக் கைகளை பார்த்தாலே உண்மை விளங்கும். சமுதாய நலனிலும், பாபரி மஸ்ஜித் கட்டப்படவேண்டும் என்ற உண்மையான அக்கறையும் பிளவுபட்ட அந்த இயக்கங்களுக்கு இருக்குமானால், டிச. 6. போராட்டத்தை இணைந்து அவர்கள் செய்திருக்க முடியுமே! நோக்கம் ஒன்றாக இருக்கும் போது பிரிந்து செயல்பட வேண்டிய அவசியம் என்ன? இதிலிருந்தே அவர்களின் உள்நோக்கம் அம்பலப்பட்டுப் போகிறதே! இறைவனுக்காக எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டிவர்கள், தங்களுடைய அமைப்புக்கு செல்வாக்கு எவ்வாறு உள்ளது என்பதை பிற சமுதாய மக்களுக்குக் காட்டுவதற்காக வீதிக்கு வந்து விட்டார்களே! இதுதான் ஏகத்துவவாதிகளின் நிலையா? என்று மற்றவர்கள் கேலி செய்கிறார்கள். ஆகவே போராட்டங்கள் நடத்தி பிற சமுதாய மக்களுக்கு தொல்லை கொடுப்பதை விட்டு விட்டு இதற்குத் தீர்வு தான் என்ன என்பதை உலக மக்களுக்கு வழிகாட்டும் குர்ஆனைத் திறந்து பார்த்தால் நமக்கு தெளிவான வழி கிடைக்குமே! எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் மறைகுர்ஆனில் கூறுவதைப் பாருங்கள் :

> **“விசுவாசிகளே! பொறுமை மற்றும் தொழுகையைக் கொண்டு உதவி தேடுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர் களுடன் இருக்கின்றான்”.** *அல்குர்ஆன் 2:153*
>
> **“விசுவாசம் கொண்டோரே! பயம், பசி ஏதாவது ஒன்றைக்கொண்டும், செல்வங்கள், உயிர்கள், கனிகளின் விளைச்சல் குறைவைக் கொண்டும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம்! இச்சோதனைகளில் பொறுமையாக இருப்போர்களுக்கு நீர் நற்செய்தி கூறுவீராக”.** *அல்குர்ஆன் 2:155*

**தங்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றோம்; நிச்சயமாக நாம் அவன் பக்கமே திரும்பிச் செல்பவர்கள் என்று கூறுவார்கள்".**
*அல்குர்ஆன் 2:156*

**"அத்தகையோர்மீது அவர்களின் இரட்ச கனின் நல்லாசிகளும் கிருபையும் ஏற்படுகின்றது. அவர்கள்தான் நேர்வழி பெற்றவர்கள்".** *அல்குர்ஆன் 2:157*

அருமையான முஸ்லிம் சகோதரர்களே! இந்த வசனங்களைப் பலமுறை படித்துப்பாருங்கள். முஸ்லிம்களுக்கு சோதனைகள் ஏற்பட்டால் அப்போது அவர்கள் எத்தகைய நிலையில் இருக்க வேண்டும் என்று மிகத்தெளிவாக அல்லாஹ்வின் வசனங்கள் கூறுவதைப் பாருங்கள். சோதனைகளில் பொறுமை தேவை என்றே அல்லாஹ் கூறுகிறான். ஆர்ப்பாட்டம், போராட்டம் எதுவும் தேவையில்லை. **"முஸ்லிம்களே! நீங்கள் பொறுமை யைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள் அல்லாஹ்விடம்"**

*அல்குர்ஆன் 2:153*

இறையில்லம் இடிக்கப்பட்டது, இது தொடருமோ என்ற பயம்; இறையில்லம் தகர்க்கப்பட்டது; இதனால் வகுப்புக் கலவரம், இதனால் பொருளாதார, உயிர் ஆகியவைகள் இழப்பு. ஆகவே இது ஒரு மாபெரும் சோதனை; முஸ்லிம் சமுதாய மக்களுக்குத் துன்பம் ஏற்பட்டு விட்டது. ஆகவே நமக்குத் தேவை பொறுமை. பொறுமையாக இருந்தால் அதற்கு இறைவனின் நல்லாசி உண்டு, கிருபை உண்டு.

இத்தகைய சிறப்புக்குரிய மக்களாக ஆகி பிற மக்களுக்கும் வழிகாட்டியாக வாழக்கூடிய இறைவனின் விசுவாசிகள், அல்லாஹ்வின் படைப்புகளிடம் பள்ளியை கட்டித்தா? என்று முறைதவறி முறையிடுவது சரிதானா? நியாயமானதா? என்று சிந்தித்துப் பாருங்கள். ஆகவே என் அருமைச் சகோதரர்களே! இறந்து விட்டவர்களுக்கு வருடப் ஃபாத்திஹா என்ற சடங்கு போன்று டிச. 6ம் நாளை துக்க நாளாக அனுஷ்டிப்பதை விட்டு இறைவன் கூறிய வழியில் பொறுமையுடன் தொழுது வல்ல அல்லாஹ்விடமே முறையிடுவோம். எல்லாவற்றிற்கும் அல்லாஹ் போதுமானவன், விசுவாசிகள் தங்களுடைய அனைத்துக் காரியங்களை அவனிடம் ஒப்படைத்து முழுமையாக நம்பிக்கை வைப்பார்கள் என்ற இறைவனின் வசனத்தை உங்களுக்கு நினைவு படுத்தி முடித்துக் கொள்கிறேன்.

இழந்த உரிமைகளை அடைவதற்காக மற்றவர்களின் உரிமைகளைப் பறிக்காமலும், மற்றவர்களுக்குப் பீதியையோ, பயத்தையோ கொடுக்காமல், குர்ஆன், ஹதீஸ் போதனைகளுக்கு உட்பட்டு ஆகுமான வழிகளில் முயற்சிப்பது மேலே எடுத்தெழுதியுள்ள வசனங்களின் போதனைக்கு முரணானதல்ல என்பதையும் முஸ்லிம் சகோதரர்கள் உணரவேண்டும்.

ஜனவரி 2005 அந்நஜாத்